திராவிடன்

ஆசிரியர் : என்.வி.என்.

காங்கிரஸ்
யதேச்சாதி-
-காரத்தை
முறியடித்து,
ஜனநாயகத்தை
நிலைபெறச்செய்ய

தி.மு.க
வேட்பாளர்
திரு,
ப.உ.சண்முகம்
அவர்களுக்கு
உதயசூரியன்
சின்னத்தில்
வாக்களிக்க
வேண்டுகிறோம்

1—6—63
12 பக்கங்கள்

வாரஇதழ்

16 காசு.

தலையங்கம்

மலர் 16 1—6—63 மாலை 41

தயாராகிறது தமிழகம்!

—(—*—)—

வடநாட்டு ஆதிக்கத்தின் இந்தித் திணிப்பை எதிர்த்து கர்நாடகமும் போர் முரசு கொட்டியிருக்கிறது!

ஆட்சிமொழி மசோதா மக்கள் சபையில் தாக்கல் செய்யப் பட்டவுடனேயே கர்நாடக முதலமைச்சர் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துக் குரல் கொடுத்தார்!

இப்போது கர்நாடகத்தில் உள்ள பல்வேறு துறையைச் சார்ந்த பிரமுகர்களும். கல்வி நிபுணர்களும், தி. மு. கழகம் உள்ளிட்ட சர்வகட்சியினரும் போர்க்குரல் கொடுத்துள்ளனர்.

முன்னுள் கருநாடகத் தலைமை நீதிபதி திரு. மேடப்பா முன்னுள் மைசூர் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் என். ஏ. நிக்காம், முன்னுள் ஒரிசா கவர்னர் திரு. வி. பி. மேனன் ஆகியோர் அதிலே கலந்துகொண்டு இந்தித் திணிப்புக்கு எதிராக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

> ‘‘தேசீய ஒருமைப்பாட்டுக்கும் இந்தி பேசாத மக்களுக்கும் இந்தி பேசும் மக்களுக்கு மிடையே ஒற்றுமை நிலவவும், விஞ்ஞானத் துறையில் முன்னேற்றம் காணவும், வெளிநாட்டு விவகாரங்களில் இந்தியாவின் தொடர்புகளை வைத்துக் கொள்வதற்கும், ஆங்கிலத்தை மட்டுமே ஆட்சிமொழியாகவும் பயிற்றுமொழியாகவும் அனைத்திந்திய மட்டத்தில் ஏற்க வேண்டும்’’ —என்று அக்கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

இந்தித் திணிப்புக்கு தென்னுடெங்கும் எதிர்ப்பு வலுத்து வருகிறது என்பதற்கு கர்நாடகம் கொட்டியுள்ள போர்முரசு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இந்தி.. எதிர்ப்பது திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் தான் என்றுகூறி அரசினர் இந்தி எதிர்ப்புக்கு தென்னகத்தில் இருக்கும் பேரெதிர்ப்பை மூடி மறைக்க முயல்கின்றனர்.

அவர்களது கருத்து மிகவும் தவருனது என்று எடுத்துக் காட்டும் வகையில் கர்நாடக மாநிலத்தில் இருந்து போர்க்குரல் கேட்கிறது!

இந்தி எதிர்ப்பு உணர்ச்சி என்பதை கட்சிப் பிரச்சினைகளுடன் முடிபோட்டுவிட காங்கிரஸ் அரசாங்கம் கருதுமானுல் அதைவிட ஏமாற்றுத்தனம் வேறு எதுவும் இருக்கமுடியாது!

தென்னகத்தில் தோன்றியுள்ள இந்தி எதிர்ப்பு, கொந்தளித்துள்ள மக்கள் சமுதாயத்தின் உணர்ச்சிப் பிரதிபலிப்பாகும். இதை உணர்ந்துகொண்டு அதற்கேற்ற முறையில் ஆவனசெய்ய காங்கிரஸ் அரசாங்கம் முன்வரவேண்டும்.

அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு திரு. மேடப்பா அவர்கள் பேசுகையில் ‘‘ஆங்கிலத்தில் புத்தம் புதிய அறிவுக் கருத்துக்கள் அனைத்தும் நிரம்பியுள்ளன. அந்த மொழியைக் கைவிடுவது தற்கொலைக்கொப்பாகும்’’ என்று இந்தி வெறியர்களுக்கு புத்தி புகட்டும் வகையில் பேசியுள்ளார்.

ஆங்கிலம் என்பதை அந்நிய மொழி என்று இந்தி வெறியர்கள் எப்படி வாதாடுகிருர்களோ அதேபோலத்தான் இந்தி பேசாத மக்களுக்கு இந்தி அந்நிய மொழியாகும்!

ஆனல் ஆங்கிலம் என்ற அந்நிய மொழி அகில உலகத் தொடர்புகளுக்கும் பயன்படும்.

இந்தி என்ற அந்நிய மொழிக்கு அந்தத் தகுதி கிஞ்சித்தும் கிடையாது!

ஆகவே பயனற்ற ஒரு அந்நிய மொழியை வைத்திருப்பதைக் காட்டிலும் பயனுள்ள—அறிவுக் கருத்துக்கள் நிரம்பிய ஒரு அந்நிய மொழியை, இந்தி பேசாத மக்களின் நலனைக் கருதியாவது வைத்திருத்தல் நலமன்றே!

இந்தக் கருத்தில்தானே, பிரதம மந்திரி நேரு அவர்களின் வாக்குறுதியை அனைவரும் வரவேற்றனர்!

ஆனல் இந்தி வெறியர்கள், நேருவின் வாக்குறுதியைத் துச்சமெனக் கருதிப் புறக்கணித்தது மட்டுமல்லாமல், இந்தி பேசாத மக்களின் உணர்ச்சியையும் மதிக்க மறுத்துவிட்டனர்!

இந்திச் வெறியர்களின் இந்த செயலை எதிர்த்து தென்னுட்டில் ஒலிக்கும் போர்க்குரல் நாளுக்கு நாள் வலுத்துக்கொண்டே வருகிறது!

கர்நாடகத்தில் சர்வ கட்சியினரும் ஒன்றுகூடி இந்தியை எதிர்த்துள்ளதைப் போலவே தமிழகத்திலும் தி. மு. கழகமும் மற்ற கட்சிகளும் இந்தியை எதிர்த்துப் போர்க்குரல் கொடுத்து வருகின்றன.

அறிஞர் அண்ணு அவர்களும் ஆச்சாரியார் அவர்களும் மற்ற பிரமுகர்களும் பல்வேறு கூட்டங்களில் இந்தித் திணிப்பை எதிர்த்து முழக்கம் செய்துள்ளனர்!

அதோடு மட்டுமல்லாமல் ஜூன் 8ந்தேதி சென்னையில் சர்வகட்சித் தலைவர்கள் கொண்ட மாநாடு ஒன்று நடைபெறுகிறது.

அறிஞர் அண்ணு, ராசகோபாலாச்சாரியார், தமிழவேள் பி. டி. ராசன், கே. பாலசுப்பிரமணிய ஐயர், ஏ. சுப்பையா உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்துகொண்டு இந்தியை எதிர்க்க உருவான திட்டம் தீட்டுகின்றனர்.

அவர்களது திட்டத்தை ஏற்று இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துப் போர்க்குரல் கொடுக்கத் தமிழகம் மட்டுமல்ல தென்னகமே தயாராகிக் கொண்டிருக்கிறது!

இந்தி வெறியர்கள் இதை உணர்ந்து இனியாவது நல்ல முடிவினை மேற்கொள்ள முன்வருவார்களாக!

●

புத்தம்புதிய நடை! களிப்பூட்டும் கருத்தோவியம்!

●

தோழர். வி. ஆர். மதனகோபால் பி.காம்.,

அவர்களின் அருமையான படைப்பு!

அண்டனி

கிளியோபாட்ரா!

“திராவிடன்” 8-6-63 இதழிலிருந்து

தொடங்குகிறது!

○

கிழமைதோறும் சிறந்த விருந்து!

○

அன்புக்குரிய தோழர்களே சுவைக்க வாரீர்.

நிர்வாகி—திராவிடன்.

அமைச்சர்களே!

விளக்கங்கள் தேவையில்லை; விவேகத்தோடு செயலாற்றுவீர்!

—(0)—

“திராவிட முன்னேற்றக் கழகம் இந்தித் திணிப்பை எதிர்த்துப் போரிடும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பது பற்றி ஆளும் பீடத்தில் உள்ளவர்கள் எங்கே அலட்சியம் காட்டுவார்களோ என்றிருந்தேன்.

ஆனால், அவர்கள் நல்ல தெளிவோடு நம்மைப்பற்றி புரிந்திருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

தி. மு. கழகம் போராட்டம் நடத்த இருககிறது என்றவுடன் ஏன் காமராசர் கடற்கரையில் கூட்டம் போட்டு பேசவேண்டும்?

இராசகோலாச்சாரியார் இந்தியை எதிர்க்கிறார். இன்னும் பலர் எதிர்க்கிறார்கள். சில நண்பர்கள் போராட்டம்கூட நடத்தினார்கள்.

அந்தச் சமயத்திலெல்லாம் கூட்டம் போட்டு மொழிப்பிரச்னை பற்றி விளக்கம் தராடல், நாம் போராட்டம் நடத்துகிறோம் என்றதும் கூட்டம்போட்டு விளக்குகிற அளவுக்கு வருகிறார் என்றால், நம்மைப் பற்றி அவர்கள் அலட்சியமாக இருக்கவில்லை; நம் முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கிறார்கள்.

ஒரே நாளில் ஒரே தெருவில் இரண்டு மூன்று கல்யாணங்கள் நடந்தால் ஒன்றில் கூட்டமே இருக்காது. ஒன்றில் இடமே இருக்காது. அடுத்த கல்யாணத்தில் என்ன அதிககூட்டம் என்று சிலர் எட்டிப் பார்க்க கடைசியில் மணப்பெண்ணும் மாப்பிள்ளையும் தான் எஞ்சியிருப்பார்கள்.

மற்றக் கட்சியினர் போராட்டம் நடத்திய போதுகூட பேசாதவர்கள் இன்று பேசுவது ஏன்?

இப்போதுதான் நாம் வாழை மரத்தை வெட்டிவந்திருக்கிறோம் இன்னும் தோரணம் கட்டி, சாதாரண மேளம் கொட்டி, கெட்டி மேளம் கொட்டி, தாலி கட்ட வேண்டியிருக்கிறது.

ஏன் நாம் போராடப் புகும் போது மட்டும் இப்படி விளக்கமளித்து மக்களை தடுக்க நினைக்கிறார்கள் என்றால் அவர்களுக்குத் தெரியும்.

தி. மு. க. போராட்டம் நடத்தினால் அது சாதாரணமாக இருக்காது. மக்களும் அதற்கு பேராதரவு தருவார்கள்—என்று மந்திரிகள் நினைக்கிறார்கள். எனவே விளக்கம் பேசியாவது மக்களைத் தடுத்து நிறுத்தப்பார்க்கிறார்கள்.

மற்றவர்கள் போராட்டம் நடத்தியபோது அமைச்சர்கள் இப்படிச் செய்யவில்லை என்றால் அதற்கு இரண்டு மூன்று காரணங்கள் உண்டு!

அதைப் போராட்டம் என்றே கருதியிருக்க மாட்டார்கள்.

குறிப்பிட்ட காலத்தோடு முடிந்துவிடும் என்று நினைத்திருப்பார்கள்.

இந்தப் போராட்டம் நமக்குக் கூட உதவியாக இருக்கும் என்று நினைத்திருக்கலாம்.

திருவண்ணாமலையிலும் —சென்னையிலும் பேசுகிறபோது “தி. மு. கழகம் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டியதில்லை. பொது மக்களே!- அப்படி ஈடுபட்டாலும் அதை ஆதரிக்காதீர்கள்!”— என்று காமராசர் பேசியிருக்கிறார்.

ஆனால் காமராசர் ஒரு தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டிருக்கிறார்.

மொழிப் பிரச்சினையைப் பற்றி தாம் பேசினால் மக்கள் ஒத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறாரா? அவரே நம்பித்தான் பேசுகிறாரா?

ஆட்சி மொழிப் பிரச்சினையில் ஆங்கிலத்தின் இடத்தை இந்தி பிடித்தால் என்ன ஆகும் என்பதை நிர்வாகத் துறையிலுள்ளோரும்,

இன்னொரு மொழி ஆட்சி மொழியானால் இங்குள்ள மொழி என்ன ஆகும் என்பதை மொழியறிஞர்களும் கூறினால் பொருள் உண்டு. அதில் இவர் முடிவான அபிப்பிராயம் கூறுவதா?

வீட்டில் யாருக்காவது நோய் என்றால், இன்னும் இரண்டு நாளில் குணமாகிவிடும் என்று டாக்டர் சொன்னால் பொருளுண்டு; மாரியம்மன் கோவில் பூசாரி சொன்னால் கூட ‘ஓகோ; அப்படியிருக்கலாம்’ என்று சிலர் கேட்கவாவது செய்வார்கள்.

ஆனால், நோயாளிக்குப் பக்கத்திலேயே ஒரு படுக்கையை போட்டுக் கொண்டு, வயிற்றுவலியால் துன்பப்பட்டுக் கொண்டிருப்பவன் “இன்னும் நாலு நாளில் உன் வயிற்று வலி தீர்ந்து விடும்” என்று கூறுவது?

அதைப்போல் இந்தியால் தமிழ் கெடும் என்பதை நமக்கு மறைமலை அடிகளாரும், நாவலர் சோமசுந்தர பாரதியாரும், உமாமகேசுவரம் பிள்ளையும், திரு.வி.க.வும் பல்கலைக் கழக துணை வேந்தர்களும் தமிழ்ப் புலவர்களும், 10 நாட்களுக்கு முன் நடைபெற்ற புலவர் குழுவும், தமிழாசிரியர் மாநாடும் கூறிய பிறகு, காமராசர் தான் கூறுவதை மக்கள் நம்புவார்கள் என்று எதிர்பார்க்கிறாரா?

நம் மகனுக்கு பெண் பார்க்கச் சென்ற ஏழெட்டு பேர்களில் ஒருவர் “பெண் சிவப்பு இல்லை; மாநிறம்” என்று சொல்ல, பெண் கொஞ்சம் சாய்ந்து நடக்கிறது என்று இன்னொருவர் சொல்லும் போது, பெண் வீட்டுக்கெதிரில் வெற்றிலை பாக்குக் கடை வைத்திருப்பவன் “பெண் ரோஜா பூ போல் இருக்கும்” என்றால் நம்பிக்கை ஏற்படாதது மட்டுமல்ல; சந்தேகம் கூட ஏற்படும்!

அதைப்போல காமராசர் ‘நான் அதிகம் படித்தவனல்ல; அதை மறைக்கவும் இல்லை. ஆனால் தமிழ் இந்தியால் கெடாது’ என்றால் ஊர் நம்புமா?

உங்கள் மேடையில் மறைமலை அடிகளாருக்கு சமமானவர்களை விட்டுப் பேசச் சொல்லியிருக்கலாம்.

காமராசருக்கு இது பற்றி கருத்து தெரிவிக்க உரிமையே இல்லை—என்று கூறவில்லை.

ஆனால் முதன் மந்திரியாக இருந்துகொண்டு இப்படிப் பேசுவதால்தான் மக்கள் சகித்துக் கொள்கிறார்கள்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்து இப்படிப் பேசியிருந்தால் சிறு பிள்ளைகள்கூட “இவருக்கு தமிழும் தெரியாது; இந்தியும் தெரியாது; இவர் பேச வந்து விட்டார் என்று கைகொட்டிச் சிரிப்பர்!

பக்தவத்சலம் காமராசரைப் போல் அடித்துப் பேசவில்லை. ஆனால் தமிழுக்கு இந்தியால் ஆபத்தில்லை. அதுவும் காமராசர் இருக்கிறவரை ஆபத்தில்லை. என்று கூறியிருக்கிறார்.

பக்தவத்சலத்திற்கு இந்தி வேண்டுமா—தமிழ் வேண்டுமா எனபதில்கூட அக்கறையில்லை. காமராசர் வேண்டுமென்று அவர் முன்னாலேயே சொல்வதிலே அவருக்கு நாட்டம்.

யாரோ கலகமூட்டி விடுபவர்கள் காமராசரிடம் சென்று, இந்த பக்தவத்சலத்திற்கு முதன் மந்திரி பதவி ஆசை. என்று சொல்லியிருப்பார்கள். ஆகவே தான் காமராசரை மேடையில் வைத்துக்கொண்டு “இவர் இருக்கிறவரை ஆபத்தில்லை” என்று கூறியிருக்கிறார்.

என் அலுவலகத்தில் ஒரு ஓவியர் இருந்தார். அவர், நான் வருகின்றபோது—அதாவது காலை 11 மணிக்குத்தான் அலுவலகம் வருவார். மற்ற தொழிலாளர்கள் பார்த்து கேட்டால் “நான் முதலாளியு [illegible]ர்தான் [illegible]நவேன்”— என்பா[illegible]

மாலை [illegible] மணியா[illegible]தும், தொழிலாளர்க[illegible]ர் வேலை[illegible]ய முடித்துச் செல்வார்கள். அப்போது இந்த ஓவியரும் வெளியே போவார்; நான் அழைத்து “என்னய்யா இப்போது போகிறாய்” என்றால்

அறிஞர் அண்ணா அறைகூவல்!

"நான் தொழிலாளியுடன்தான் போவேன்"—என்பார்.

வேலைக்கு வருகிறபோது மட்டும் 'முதலாளியுடன் வருவேன்' என்றும், வேலையை விட்டுப் போகும்போது மட்டும் "தொழிலாளியுடன் போவேன்" என்றும் கூறுகிற விசித்திரப் பிறவியை அலுவலகத்தில் மட்டுமல்ல; கோட்டையிலும் பார்க்கிறேன்.

காமராசர் இந்தி என்றால் தேர்தலில் பிரச்சினையாக வை என்கிறார். நாட்டுப் பிரிவினை என்றால் சட்டம் போடு என்கிறார்.

அந்த விசித்திரப் பிறவி என் அலுவலகத்தில் இருக்கிறான்; காமராசர் கோட்டையில் இருக்கிறார் அவ்வளவுதான் வித்தியாசம்.

ஜனநாயகத்தில் கிளர்ச்சிக்கு இடமில்லை என்கிறார் காமராசர். ஒருவேளை பச்சையப்பன் கல்லூரி அரசியல் பேராசிரியர் இப்படிக் கூறியிருந்தால் கொஞ்சம்யோசிக்கலாம்.

ஆனால் நான் ஜனநாயகத்தில் அப்படி இல்லை. நான் அதிகம் படிக்கவில்லை. ஆனால் படித்ததை தெளிவாகப் படித்திருக்கிறேன். அப்படிப் படித்ததை மறக்காமலும் இருக்கிறேன்.

நான் காமராசருக்குச் சொல்லிக்கொள்வேன். ஜனநாயகத்தில்தான் கிளர்ச்சிகளுக்கு இடமுண்டு-சர்வாதிகாரத்தில் கிளர்ச்சிகளுக்கு இடமில்லை; வெடிகுண்டு போடுவதற்கு இடமுண்டு; கட்டிடங்களை தரைமட்டமாக்க இடமுண்டு; [illegible] னுவ கிளர்ச்சிக்கு இடமுண்டு.

ஆனால், ஜனநாயகத்தில் தன்னைத்தானே வாட்டிக்கொண்டு—தனக்குத்தானே துன்பமூட்டி—தியாகம் செய்து மக்களின் மனதை உருக்கி ஆதரவைப் பெறும் கிளர்ச்சிகள் நடக்கும்.

இதுபற்றி காமராசர் ஓய்வு வேளையில் விஷயம் தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளட்டும்.

அமெரிக்கா ஒரு ஜனநாயக நாடு அங்கு நீக்ரோக்களுக்குப் பள்ளியில் இடமில்லை—ஓட்டல்களில் நிறபேதம் காட்டப்படுகிறது—படக் காட்சிகளில்கூட நீக்ரோக்களுக்கு தனியிடம்—இதை எதிர்த்து நீக்ரோக்கள் கிளர்ச்சி நடத்தினார்கள்.

உயர்நீதி மன்றத் தீர்ப்பு அவர்களுக்குச் சாதகமாக இருப்பதால் அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

ஜனநாயக நாட்டில்தான் கிளர்ச்சிகள் என்னென்ன செய்ய போகிறோம். எப்படிச் செய்யப் போகிறோம். என்று நாங்களும் சொல்கிறோம்-நீங்களும் கேட்கிறீர்கள்- 17-ம் தேதி கிளர்ச்சி என்றால் 4-ம் தேதி அறிவிக்கிறோம்; இன்னின்னார், இந்த இந்த இடத்தில் கிளர்ச்சி செய்வார்கள் என்று கூறுகிறோம்!

ஆனால் சர்வாதிகார நாட்டில் இரசியச் சதிகள் நடைபெறும்.

அரசியல் பேராசிரியரின்

அரிய தத்துவம்!

—(...)—

"சனநாயகத்தில் கிளர்ச்சி கூடாதென்று எனக்கு சனநாயகம்பற்றிச் சொல்லித்தருகிறார் முதலமைச்சர்; அவ்வித ஏற்றம்மிகுந்த நிலையில் அவர் இருக்கிறார்! பள்ளியிலேயே சனநாயகம் படித்த நான், அவர் சொல்லுவதைக் கேட்கும் பரிதாப நிலையில் இருக்கிறேன்! 'சனநாயக அமைப்புள்ள நாட்டில் மட்டுமே கிளர்ச்சிக்கு இடம் உண்டு; சர்வாதிகார நாட்டில் இதற்கு இடமில்லை' என்பதை அவருக்கு நான் சொல்லிக்கொள்கிறேன்.

கிளர்ச்சிகளும்—ஏன்—நேரடி நடவடிக்கைகளும், வன்முறை இல்லாத முறையில் நடத்தப்பெறுவது, சனநாயக முறைக்கு உட்பட்டதே. நிறவெறியை எதிர்த்து அமெரிக்கா நீக்ரோக்கள் நடத்திவரும் கிளர்ச்சியும், மறியலும் இதற்குச் சான்று."

இரண்டு வால் நட்சத்திரங்களைப் போன்று, பிரிவினைத் தடைச் சட்டமும், இந்தித் திணிப்புச் சட்டமும் வந்துள்ளன. பிரிவினைத் தடைச் சட்டம், அடிப்படை உரிமையான பேச்சுரிமையைப் பறிப்பதாக உள்ளது.

உலகில் வேறு எங்கும் இல்லாத பேச்சுரிமையைக் கொடுத்துவிட்டதாகக் காங்கிரசார் பெருமை பேசுகின்றனர்; ஆனால், வெள்ளையன் ஆட்சிக் காலத்தில் இருந்த பேச்சுரிமையைவிடக் கூடுதலாக இப்பொழுது இருக்கவில்லை. விடுதலை கேட்கும் உரிமையை—அதுவும், இங்கிலாந்து நாட்டிலேயே சென்று கேட்கும் உரிமையை—வெள்ளையன் அளித்திருந்தான்.

அடிப்படை உரிமைமீது சில கட்டுப்பாடுகள் விதிக்கலாம். 'இந்த நேரத்தில்—இப்படிப் பேசக்கூடாது' எனச் சில கட்டுப்பாடுகள் விதிக்கலாமேயன்றி, 'திராவிடநாடு கேட்டுப் பேசக்கூடாது' எனத் தடைவிதித்து, அரசியல் சட்டம் அளித்துள்ள அடிப்படை உரிமையையே பறிக்க அரசினருக்கு அதிகாரம் இல்லை. இதன்மீது, நாம் வழக்கு மன்றத்திற்குச் செல்லப்போவதில்லையாயினும், வேறு யாரும் செல்லக்கூடும்."

—குடந்தையில் அறிஞர் அண்ணா

எனவே காமராசர் ஜனநாயக நாட்டில் கிளர்ச்சியா என்று கேட்பது கல்யாண வீட்டில் நாதசுரமா? சாம்பாரில் பருப்பா? கல்யாணத்தில் மணமகள் தேவையா? என்று கேட்பது போலிருக்கிறது.

இந்திச் சட்டத்தை எதிர்த்து அண்ணாரையிடம் யாரும் பேசியிருக்கமாட்டார்கள் என்று பக்தவத்சலம் கூறியிருக்கிறார்.

ஆட்சி மொழிச்சட்டத்தை ஆதரித்துப்பேசிய ஒருவர்—ஒரு அம்மையார் திருமதி யசோதா ரெட்டி என்பவர் கூறினார்.

"ஏ! இந்தி பேசும் மக்களே! இந்தி வந்தால் நூற்றுக்கு நூறு நன்மை உங்களுக்குத்தான். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வேண்டும். ஏ! இந்தி பேசும் மக்களே! உங்களுக்கு மட்டு மரியாதை வேண்டும். அரசியல் சட்டப்படியும் நீங்கள்தான் பலம் பெற்றவர்கள்"

-இப்படி அவர் பேசியபோது பானர்ஜி என்பவர் குறுக்கிட்டு "அப்படி இருந்தாலும் உங்களுக்குரிய அன்பு செலுத்துவோம்" என்றார்.

உடனே அம்மையார் பேசுகிற, போது தாயன்போடு பேசுகிறீர்கள். நடக்கிறபோது மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டுகிறீர்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பது முக்கியமல்ல. நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதுதான் முக்கியம்?

ஆங்கிலம் ஆட்சிமொழியாய் இருக்கிற இந்தக் காலத்தில்கூட இந்தித் தேர்தலில் தேரவில்லை என்பதற்காக என் கணவருக்கு பதவி உயர்வு மட்டுமல்ல; சம்பள உயர்வே தரவில்லை. அவர் புத்திசாலியில்லை என்று கூறிவிட முடியாது. பல்கலைக் கழக வகுப்புகளில் அவர்தான் முதன்மையில் இருந்தார். இந்திப் பரிட்சை காரணமாக இப்படி சம்பள உயர்வு தரவில்லை என்றார்.

இதற்கு லால்பகதூர் சரியான பதில் தரவில்லை. நானும் மாநிலங்களவையில் இதுபற்றிச் சொன்னேன். பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் கொட்டைப்பாக்குக்கு விலை சொல்வதுபோல நான் ஒன்று கேட்க லால்பகதூர் இன்னொரு பதில் சொன்னார்.

மேலும் அந்த அம்மையார் "10 வருடத்துக்குப் பிறகு பார்க்கலாம் என்கிறீர்கள். காலமாறுதலுக்கு 10 வருடம் மிகச் சாதாரணம்! 50 வருடம் 100 வருடம் என்றிருந்தால்தான் மாறுதல் ஏற்பட முடியும்?

இந்தியை இப்போது கொண்டு வராதீர்கள் என்று கும்பிட்டுக் கொண்டே சுற்றிச் சுற்றி நாடக மேடையில் கும்பிடுவது போல் கெஞ்சிக் கேட்டார்கள்.

பாராளுமன்றத்தில் — பகிரங்கமாக—இங்குள்ள அமைச்சர்கள் காது செவிடுபடக் கூறினார்கள் என்றால் தனியாக என்னைப் பார்த்துப் பேசும்போது என்னென்ன கூறியிருப்பார்கள்?

அவர்கள் நெஞ்சம் வெந்து சொன்ன மொழிகளைக் கூறினால் யார் கூறியது என்று கேட்டு அவர்கள் அரசியல் வாழ்விற்கு தீங்கு செய்வார்களோ அமைச்சர்கள் என்றே எண்ணுகிறேன்.

இங்குள்ள ஒரு மந்திரியைப் பற்றி படிப்பு வாசனை அறியாதவர் என்றும் இன்னொரு மந்திரியைப் பற்றி 'காற்று வீசும் பக்கம் திரும்புவார் என்றும் கூறினார்கள்.

நேருவின் வாக்குறுதி இந்தச் சட்டத்தில் இருக்கிறது என்கிறார்கள் காமராசரும்,பக்தவத்சலமும்.

நேருவே பாராளுமன்றத்தில் வாக்குறுதியை எப்படிச் சட்டத்தில் புகுத்துவது என்று புரியவில்லை என்றார்.

என்னைப் பார்த்துக்கொண்டே பண்டிதர் பேசினார் "ஆங்கிலம் என்றென்றும் இருக்கவேண்டும் என்று கூறுபவர்கள், 10 வருடம் ஆங்கிலம் நீடிக்கச் செய்யும் சட்டத்தைத்தானே கொண்டுவருகிறேன், அதையேன் ஏற்கக்கூடாது?" என்று முறைவாகக் கேட்டார்.

காங்கிரசின் ஆரம்பகால அரசியல் வானில் ஒளிவிட்ட சர்டேஜ் பகதூர் சாப்ருவின் குமாரர்—உயர்நீதி மன்ற நீதிபதியாய் இருந்தவர்—திரு பி. என். சாப்ருவே, "நேருவின் வாக்குறுதி சட்டத்தில் இல்லாதது கண்டு வருத்தப்படுகிறேன். எப்படியும் புகுத்தியிருக்கவேண்டும். புகுத்த முடியாது என்பதை ஏற்கமுடியாது"—என்றார்.

நேருவும்—சட்ட நிபுணர் சாப்ருவும் வாக்குறுதி சட்டத்தில் இல்லையென்று! ஆனால் காமராசரும் பக்தவத்சலமும் வாக்குறுதி சட்டத்தில் இருக்கிறது என்கிறார்கள்.

எசமான் வேலைக்காரனை கடுமையாக அடிக்கவே, தழும்பு ஏறிவிடுகிறது. சிறிது நேரம் கழித்து அழைத்து "அடி பலமா; தழும்பு ஏறிவிட்டதா?"—என்று கேட்கிறபோது "இது தழும்பல்ல, ஏற்கனவே அப்படி இருந்தது"—என்று அடிமைப் புத்தியுள்ளவர்கள் கூறுவார்கள்.

அதுபோல், இங்கு அடிமைப் புத்தியில் ஊறிப்போயிருக்கும் இவர்கள், வாக்குறுதி, சட்டத்தில் இருக்கிறது என்கிருர்கள்!

இந்த விளக்கம் பிடிக்கவில்லையென்ருல் தேர்தல் பிரச்சினையாக்குவோம்! என்கிருர் காமராசர்.

தமிழகத்தின் பல பகுதிகளிலும் சொன்னேன் — தலைநகரத்திலும் சொல்கிறேன். பிரிவினை பேச்சு பற்றியும் அதே விதத்தில் தேர்தல் பிரச்சினையாக்கிவிட்டு—பிரிவினைத் தடைச்சட்டத்தை வாபஸ் வாங்கு !

அதெல்லாம் முடியாது, பிரிவினையைத் தடுக்க சட்டம்தான் என்ருல், இந்திக்குக் கிளர்ச்சிதான் !

பிரிவினை வேண்டாம்—என்று மக்கள் தீர்ப்பளித்தால் தி. மு. கழகத்தை கலைத்துவிடுகிறேன் என்று நான் கூறவில்லை. திராவிட நாட்டுப் பிரிவினை கோரிக்கையை கைவிடுகிறேன் என்றுதான் சொன்னேன்.

தி. மு. கழகத்தை கலைத்துவிட மாட்டாரு—எனப்பலர் எதிர் பார்க்கிருர்கள்.

பகலிலும் இரவிலும், தனிமையிலும் கூட்டத்திலும், பெரியார்களும், சின்னவர்களும் தி. மு. க. அழியாதா; ஒழியாதா!''--என்றே எண்ணிக் கொண்டிருக்கிருர்கள்.

அவர்களுக்குச் சொல்வேன் ''உங்களுக்கு இந்த ஆசை இருக்கிற மட்டும், நான் தி. மு. கழகத்தைக் கலைக்கமாட்டேன்; உங்களுக்கும் இடம் தரமாட்டேன்!''

நீங்கள் சட்டம் கொண்டுவந்ததும் 'பட்' என்று முறிந்துவிழவா, இவ்வளவு கஷ்டப்பட்டு வளர்த்தோம்?

நீங்கள் சொன்னவுடன் கழகத்தைக் கலைப்பதற்கா மதியழகன் அடிபட்டார்? கோ. சு. மணி பிணமாக பூமியுள் புதைந்தார். தாளமுத்து நடராசன் உயிரிழந்தார்.

நீங்கள் சொன்னவுடன் கலைப்பதற்காகவா 34 லட்சம் மக்கள் எங்களுக்கு ஓட்டுப்போட்டார்கள்.

நான் யார் கழகத்தைக்கலைக்க? வீட்டுத் தோடத்திலுள்ள மாட்டுக் கொட்டகையா? நினைத்தவுடன் கலைத்தெறிய ?

இது மக்கள் இயக்கம்! மக்கள் நினைத்தால் என்னைத் தூக்கியெறியலாம் !

கட்சியைக் கலைத்துவிடு என்கிருர்கள் சில நண்பர்கள். நினைத்தால் கலைத்துவிடும் கட்சிகள் அவர்களிடத்திலே இருக்கும் போல் இருக்கிறது.

25 பேர் கூடி ஒரு கிளைக்கழகம் அமைத்து, பிறகு கிளைக் கழகங்கள் கூடி நகரக் கழகம் அமைத்து, நகரக் கழகங்கள் வட்டக் கழகங்கள் அமைத்து, வட்டக் கழகங்கள் மாவட்டக் கழகங்கள் அமைத்து, மாவட்டக் கழகங்கள் பொதுக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, பொதுக்குழு செயற்குழுவைத் தேர்ந்தெடுத்து, செயற்குழுவிற்குப் பொறுப்பாக பொதுச்செயலாளர் இருக்கும் ஒரு ஜனநாயகக் கட்டுக்கோப்புள்ள இயக்கம் தி. மு. க.! அதைக் கவிழ்த்து விடுவோமா ?

தேர்திருவிழாவில் கூட எந்தத் திருடனும் கழுத்திலுள்ள சங்கிலியை கழற்றித்தருகிருயா?' என்று கேட்பதில்லை; கேட்டால் யார் கொடுப்பார்கள்? திருடனுக்குள்ளதுகூட சில நண்பர்களுக்கில்லை.

'அதிகம் சதைபோட்ட உடம்பு; கொஞ்சம் குறைத்துக்கொள்! வீடு இடிந்திருக்கிறது; கொஞ்சம் திருத்திக்கட்டு!''—என்று நல்லெண்ணத்தோடு கூறினல் யோசிப்பார்கள்

பணபலத்தை-பஸ் முதலாளிகளின் துணையை பக்கபலமாகக் கொண்ட காங்கிரஸ் 205 இடங்களுக்குப் போட்டியிட்டு 50 லட்சம் வாக்கு பெற்றது.

140 இடங்களுக்குப் போட்டியிட்ட தி. மு. கழகம் பஞ்சை பராரிகளை நம்பி—பாட்டாளிகளை நடுத்தர வர்க்கத்தினரை—உண்டி குலுக்குவோரை நம்பி போட்டியிட்டு 34 லட்சம் வாக்கு பெற்றது.

200 இடங்களுக்கு 50 லட்சம்! 140 இடத்திற்கு 34 லட்சம்!

கை கழுத்தளவு வந்துவிட்டது; ஜாக்கிரதை!

எங்கே மேலும் கை வலுத்துவிடுமோ என்று அஞ்சித்தான் ''கலைத்துவிடுவாயா? கலைத்துவிடுவாயா? என்கிருர்கள். அவர்களை அவ்வளவு விட்டுவிடுவதாயில்லை.

மார்க்கட்டுக்குப் போகிறவர்கள் கோழி வாங்குகிறபோது தலையைப் பிடித்து தூக்கிவருவதில்லை. கால்களை கட்டி தூக்கி வருகிருர்கள். அதே போல் வாத்தை காலைப் பிடித்து தூக்கி வருவதில்லை; தலையைப் பிடித்து தூக்கிவருவார்கள். ஜந்துக்களை தூக்கிவருவதில் முறையுண்டு.

வயிற்று வலிக்கு உள்ளுக்கு மருந்து சாப்பிடுவார்கள்; தலைவலிக்கு தடவிவிடுவார்கள். விஷக் காய்ச்சலுக்கு ஊசி போடுவார்கள். இப்படி நோய்க்கு மருந்து கொடுப்பதில் முறையுண்டு.

வேட்டை முறையிலும் பல வகையுண்டு.

அதேபோற் உன்னை எங்கே சந்திப்பது என்பதற்கு வழி இருக்கிறது.

வேறு கட்சிக்காரர்களும் கைவிரல் விட்டு எண்ணிக் கொண்டிருக்கிருர்கள். 'மே போச்சு; ஜூனில் போராட்டம்; ஜூலையில் தி. மு. க. அழிந்துவிடும்! நாம் வாழ்வோம்!'' என்று!

நாங்கள் உள்ளே போகிறபோது, எங்கள் தோழர்களை உங்களிடம் வரவா வழிசெய்து விட்டுப் போவோம் ?

மலேயாவுக்கு நான்கு மாதம் வேலை 'செய்யப்போகிறவன், மகனை அழைத்து 'மகனே நன்ருகப் படி!' என்றும், மனைவியை அழைத்து 'கவலைப்படாதே!' என்றும் கூறிவிட்டுப் போவான். அவன் 'வரட்டும்! வரட்டும்!' என்று குடும்பத்தாரும் காத்திருப்பர்.

மலேயா போகிறவனும் போவான். அவன் திரும்பி வருகிறவரை வீட்டிலுள்ளோர் அவன் குடும்ப நலனைக் காத்துவருவார்கள். இதற்கு மேல் விளக்கத் தேவையில்லை.

ஏணிமேலே ஏறுகிறபோது தோளில் துண்டு போட்டுக்கொள்ளமாட்டார்கள். தலையில் எடுத்துக் கட்டிக் கொள்வார்கள். குளிக்கப் போகும்போது பெரிய துணியைக் களைந்து சிறிய துணி உடுத்திக்கொள்வார்கள்—ஆற்றில் குளிக்கும்போது கைகால்களை அசைத்து விளையாடுவார்கள். கிணற்றில் குளிக்கும்போது நின்றபடியே குளிப்பார்கள். இத்தனையும் சொல்லியா காட்டவேண்டும், மற்ற கட்சிகளுக்கு ?

தடைச்சட்டம் வரும்; ஆ! அப்படியா' என்று கூறி, எதிர்த்து அழிந்துபடமாட்டார்களா என்று சிலர் எதிர்பார்க்கிருர்கள்.

சட்டத்தையும் எதிர்ப்போம்; தேர்தல் களத்திலேயும் காங்கிரசைச் சந்திப்போம்.

●

தடைதான் ஏனோ?

(புதுவை - வெஞ்சினவேல்)

——(*)——

எங்களுக்கோர் நாடுண்டு, மொழியு முண்டு,
எழிலான கலையுண்டு; வளமு முண்டு,
சங்குண்டு, முத்துண்டு, பவளமுண்டு,
சளைக்காது கலஞ்செலுத்தக் கடல்க முண்டு,
எங்களகம் காப்பதற்கு அரண்க ளுண்டு,
இத்தனைக்கும் மேலாக அறிவு முண்டு,
மங்கலமாய் நாடாளத் திறனு முண்டு,
மண்ணுள்வோய்! பிரிவினைக்குத் தடைதான் ஏனோ!

வான்பொய்ப்பின் தான்பொய்யா நதிக ளுண்டு,
வைரமுண்டு, வான்தடவும் மலைக ளுண்டு,
மான்பாயும் காவுண்டு, மலைத்தே னுண்டு,
மலைவீழும் அருவியுண்டு, பொன்னு முண்டு,
வானைப்பார்த்து வாழாத உழவ ருண்டு;
வள்ளுவர்செய் குறளுண்டு, கனிக ளுண்டு,
நான்பிறந்த திராவிடத்தில் எல்லா முண்டு,
நாடாள்வோய்! பிரிவினைக்குத் தடைதான் ஏனோ!

மலைநிகர்த்தத் தோளுடைய மறவ ருண்டு,
மதிநுட்ப விஞ்ஞான மேதை யுண்டு,
நிலைகுலையா உழைப்பாளர் நிரம்ப வுண்டு,
நிகரில்லா அறிஞரேறு அண்ணு வுண்டு,
கலைவளர்க்கும் எழுத்தாளர், கலைஞ ருண்டு,
கண்காட்சிப் பொருளாக இயற்கை யுண்டு
உலைவளர்த்து ஆயுதம்செய் கொல்ல ருண்டு,
ஊராள்வோய்! பிரிவினைக்குத் தடைதான் ஏனோ!

மணமகிழ்ந்து திராவிடத்தை நாங்க ளாள
மதிப்புடனே பிரித்திடுக நாட்டை, இல்லை!
இனத்தோடு எதிர்ப்படுவோம் பிறகு, எந்த
இடைச்சட்டம் போட்டாலும் நில்லோம்! அஞ்சோம்!
குணத்தோடு தனியாக்கு திராவி டத்தை!
குடிமூழ்கிப் போகாது தனித்து விட்டால்
பிணங்கூட பிரிவினையை விரும்பும் போது
பிடிவாதத் தடைச்சட்டம் ஏனோ! ஏனோ!

சட்டத்தையும் எதிர்ப்போம் — காங்கிரஸ் கோட்டத்தையும் அடக்குவோம்!

"அரசியல்வாதி"

அவன் சிறையை விட்டு வெளியே வந்தபோது அவன் போராட்டம் வெற்றி பெற்றிருந்தது! அவன் வாழ்வுப்போராட்டம் வெற்றி பெறுமா? எனும் சந்தேக இதயத்திற்கு சரியான பதிலை அந்த வீதியிலே வந்த புது இளஞ்சோடிகள் மெய்ப்பித்து ஐயம் தீர்த்துவிட்டனர்!

அவன் அச்சமோ, அதிர்ச்சியோ பெறவில்லை! ஒரே ஒரு அலட்சியப் புன்னகையைத்தான் வீசினன்.

"நீ வாழப் பிறந்தவள்! எங்கிருந்தாலும் வாழம்மா! இந்த அரசியல்வாதியை நீ அடைந்திருந்தால்... ...அய்யோ! உன் வாழ்வு பரிமளிக்காது! ஆம்! நிச்சயமாக பரிமளிக்காது!"—இந்த வரிகளை அவன் பாலைவன நீர்போல் இதயத்தின் ஒரு மூலையில் ஒளிந்திருந்த 'பழைய நினைவு' இதயம் உணர்ச்சி உருவெடுத்து மேலே

சிறு கதை

கண்ட வாசகங்களை உதிர்த்தது அவன் வாய்—அதோடு மட்டுமல்ல! அந்த இளஞ்சோடிகளை கண்டபிறகு மாடுகளைப் போல் அரசியல் வாழ்வுக்கிடையே அவசர. அவசரமாய் உண்டுவிட்ட அந்தக் காதல் உணவை—அரைகுறையாய் ஜீரணித்த அவன் மீண்டும் இதயத்திற்குக்கொண்டு வந்து—அந்த இளந்தாடியோடு கூடிய அந்த 'அரசியல் வாதி' ஜீரணித்தான். இனிமேல் அந்த உணவு அவனிடம் இருக்காது!

ஃ

வசந்த காலத்திலேதான் அவனுக்கு காதல் தோன்றிற்று! அரசியல்வாதியல்லவா! அழகாகக் காதலை தொடங்கினன். ஆனல்... பாவம்! அவன் அறியவில்லை... அரசியல்வாதிக்கு காதல் அர்த்த மற்றது! அபாயம் நிறைந்தது என்பதை!

ஆனல் அவள் அறிந்திருந்தாள் போலும்!

அதனல்தான் அந்த முடிவை அவள் தேர்ந்தெடுத்தாளோ...?

அவனும்தான் என்ன செய்வான் பாவம்!

இயற்கையிலிருந்து 'அரசியல் வாதி'க்கு விதிவிலக்கா என்ன?

அவனும் அந்த உணர்ச்சிக்கு அடிமைப் பட்டதில் தவறில்லை தான்!

ஃ

சோற்றுப் பொட்டலத்துடன் புத்தகங்களை சுமந்து அவன் ஊரிலிருந்து மூன்று கல் தொலைவுள்ள பள்ளியில் படித்ததில் இருந்து — அவனும் — அவளும் நண்பர்கள்!

காக்காய் கடிகடித்து மாங்காய் பரிமாறிக் கொண்ட அவர்கள் நட்பு—இளமை வந்தவுடன் இதயங்களை பரிமாறிக் கொள்ளவும் தவறவில்லை!

அவன் படித்தான்! அவன் படிப்பிலே நாட்டுப்பற்று, மொழிப் பற்று—இனப்பற்று இவை கலந்திருந்தது. இவை கலந்திருந்த காரணத்தால்தான் அவன் 'அரசியல்வாதி'யாகிவிட்டான்! அரைகுறையாய் படிப்பை நிறுத்தி விட்டான். ஆனல் அவளோ... ...? படிப்பை வாழ்வுக்காக்கினள்! இவன் மற்றவர் வாழ ஆக்கினன் ஆம்! இவன் அரசியல்வாதியாகிக் கொண்டிருந்த அதே வேளையில் அவள் ஆசிரியை ஆகிக் கொண்டிருந்தாள்!

ஃ

இவர்களின் காதல் இன ஏற்றத் தாழ்வால் எள்ளி நகையாடப் பட்டது! தனக்கென தலைவன், தனக்கென இயக்கம் கொண்டிருந்த அவன் கதிரவன் எழும் வேளையில் செல்லுவான். இயக்க வேலைகளிலே ஈடுபடுவான். இரவு வெகு நேரம் கழித்து வீடு திரும்புவான். இருந்ததை உண்பான். ஏனெனில் அருமையான 'இலட்சிய உணவு' அவனுள் நிறைந்திருந்தது. அவனல் சற்றும் கவனிக்கப்படாத தாய்-இந்த அரசியல்வாதிக்காக பெண் தேட புறப்படுவாள். 'உன் மகனுக்குக் கால் கட்டு போடு! தானக அரசியல் மயக்கம் தீர்ந்து—'அரிசியல் மயக்கம் வந்துவிடும்'-என்ற சில பெரியவர்களின் சொல்படி அந்தத் தாயின் உள்ளம் இந்த ஆணையை சிரமேற்கொண்டு—ஆவலை உறவினர்களிடம் சொல்லிற்று. ஆனல்... ...?

'அந்த வாத்திச்சியை வச்சுகிட்டு அரசியல் பேசிக்கிட்டு ஊர் சுத்தற அந்த தாடி தடியனுக்கு பெண்ணுவது குட்டியாவது?' என்ற ஆண்மையின் ஆத்திரக் குரல் கேட்டும்... ... ... 'நல்லா கிளம்பினே! இத்தனை வருசமா அந்த தடியனல பெத்த ஒன்னையே கவனிக்க முடியலே! ஒரு செப்பு சங்கிலி கழுத்திலே போட முடியலே! ஒரு புடவை... குசேலர் வஸ்திரம் கட்ற குடும்பத்துக்கு பெண் ஒரு கேடா? ஏண்டி என் மகளுக்கு எண்ணை வாங்கித்தர அந்த தடியன் சம்பாதிப்பானு?' என்ற பெண்மையின் நாவினல் சுட்ட வடும் அந்த தாயால் பொறுக்க முடியவில்லை. இதற்கு மேல் அந்த தாயால் வாழப் பிடிக்கவில்லை.

ஆம்! அரசியல்வாதிக்கு பெண் இல்லை!

அந்தத் தாயுள்ளம் அலைகடலாய் பொங்கிற்று. அந்த பொங்குதலிலே — "அரசியல் வாதிக்குப் பெண் இல்லை! அரசியல் வாதிக்குப் பெண் இல்லை!—இந்த ஓலம் தான் மாறி, மாறி கேட்டது.

படுக்கையிலே விழுந்து விட்டாள்!

பார்வை மங்கிற்று! பணிவு, கனிவு போயிற்று! மருந்து தந்து அருந்தும் வரை காத்திருக்கும் மைந்தன்... ...?

'தோழர்களே! தமிழுக்கு ஆபத்து வந்திருக்கிறது! ஆம்! அவளுக்கு நோய் வந்துவிட்டது! படுத்த படுக்கையாகி விட்டாள்! இந்தி நுழைகிறது! எழுந்து வாரீர்! தலைவன் அழைக்கிருன் தமிழினைக் காக்க! உயிர் போகு முன்! உதிரம் ஏகு முன்! என ஆவேசமாய் கிராமம் ஒன்றில் பேசிக் கொண்டிருக்கிருன்.

அரசியல்வாதி தாயைக் கருதவில்லை. தமிழைக் கருதுகிருன்!

எத்தனை நாளைக்கு அடுத்த வீட்டுக்காரர்கள் அவன் அன்னையை பராமரிப்பார்கள்?

அவள் நயனங்கள் 'பேரன்' காணத் துடித்தது!

ஆம்! மருமகள் கேட்டது அவள் இதயம்!

ஒளிபடைத்த மகனின் விழிகளோ உறுதிகொண்ட நெஞ்சுடன் தமிழ் காக்க துடித்தது!

மகனுக்கு சேதி சொல்ல தூது அனுப்பினள்! மகனே மந்திரிக்கு கமிழ் காக்க தந்தி கொடுத்தான்!

அந்த அரசியல்வாதியின் அன்னை அகன்றுவிட்டாள் ஆசைகளை சுமந்தவண்ணம்! நிறைவேருத அவள் ஆசை - ஆவியோடு வெளியேறி காற்றிலே தவழ்ந்துகொண்டிருந்தது!

அன்னைக்காக கண்ணீரைத் தான் சிந்த முடிந்ததே தவிர 'உன்னைக் காத்தே தீருவேன்' என உறுதிகூற முடியவில்லை. ஏனெனில் 'அரசியல்வாதி' சொந்த பிரச்னைக்கு மட்டும் தீர்வு காணும் சுயநலமி அல்லவே! எந்த பிரச்சினைக்கும் பொது முடிவு காணும் பொது நலக்காரன் அல்லவா! ஐயிரண்டு திங்கள் அங்கமெலாம் நொந்து பெற்றவளுக்காக அவன் கண்கள் இயற்கையின் நியதிக்கே கட்டுப்பட்டு அழுது குவித்தது. அந்த அழுகையில்கூட அரசியல்வாதிகளின் வாழ்வுக்கு முடிவு காணும் எண்ணம்தான் அவனுக்கு அதில் தெரிந்தது.

ஆசிரியையோ அவனுக்கும் ஆசிரியையாக மாறத் தொடங்கி விட்டாள்! காதலி மட்டுமாக இருந்த அவளால் 'கனிச்சோலை' வாழ்வுக்காக அரசியல்வாதிக்கு பாடம் புகட்டத் தொடங்கி விட்டாள்!

அதற்கு முன்பு ,அத்தான் காதல் நிறைவேறுமா? என்றவள் ஆசிரியையாக மாறியதும் அத்தான் காதல் நிறைவேறும்! அரசியலை விட்டுவிடுங்கள்! அது ஆபத்தானது! அது அன்னையை அழித்ததோடு இருக்கட்டும்! அது என்னையும் அழிக்க விடமாட்டேன்! என கண்டிப்பான குரலை மேற்கொள்ள ஆரம்பித்து விட்டாள்! அதுமட்டுமல்ல!

நான் எண்பது ரூபாய் வாங்குகிறேன்! உங்களை என் சிநேகிதி அப்பாவிடம் சொல்லி ஒரு குமாஸ்தா வாக்குகிறேன். அரசியலை விட்டுவிடுங்கள்! அழ

அன்னதாசன்

காக வாழ்வோம் அத்தான்!'—என காலை பிடித்துக் கொண்டு கெஞ்சவும் ஆரம்பித்து விட்டாள்!

அரசியல்வாதி அப்போது சொல்வான்:-

பேரன்புமிக்க ஆசிரியையே! தாங்கள் பாடம் சொல்லி தர வேண்டுவது குழந்தைகளுக்கு! குமரனுக்கல்ல! மிக்க நன்றி! வருகிறேன்! விர்ரென வந்து விடுவான்.

அவன் நிலைகண்டு அவள் அழுவாள். ஆனல் அரசியல் வாதிக்கு அதிலும் ஒரு அலட்சியப் புன்னகைதான்!

என்றும்போல் கிணற்றடி மேடைக்கு அவர்கள் வந்தார்கள் அவள் கையில் கடிதமிருந்தது! அவன் கையிலும் கடிதமிருந்தது!

அவள் கரம் நடுங்கியபடி அவனிடம் நீட்டிற்று. அவன் கரம் அலட்சியமாகவே பெற்றுக் கொண்டு — அலட்சியமாகவே அவன் கடிதத்தை நீட்டிற்று.

அவள் வ்ாய் பேசாமல் ஊமையாகி விட்டது. இவன் வாய் 'போய் வா! மனமிருந்தால் பதில் தா?' என்றது. விர்ரென போய் விட்டாள். அரசியல்வாதியின்

அண்ணாவுடன் நான்



பெரியாரும் பிஸ்கட்டும்!

என். வி. என்.

14

1948-ம் ஆண்டு ஆச்சாரியார் அவர்கள் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது சென்னைக்கு வருகைதந்தார்கள். வடநாட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் வகையில், அவர் வரும் நாளன்று கருப்புக் கொடி காட்டி எதிர்ப்பதென்று திராவிடர் கழகம் திட்டமிட்டது.

அத்திட்டத்தை விவாதித்து முடிவு செய்ய திராவிடர் கழகத்தின் நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் சென்னை மவுண்ட் ரோடிலுள்ள பெரியார் இல்லத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு பெரியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். அறிஞர் அண்ணா, கே. கே. நீலமேகம், டி. பி. வேதாசலம், ஜி. பி. சோமசுந்தரம் மற்றும் மறைந்த மாவீரர் அழகிரிசாமி, சி. டி. டி. அரசு, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, கே. கோவிந்தசாமி, நான் உள்ளிட்ட 100 பேர் கலந்துகொண்டோம். நிர்வாகக் கமிட்டி கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே போலீஸ் படையும் அதிகாரிகளும் கொண்ட நான்கு மோட்டார் வேன்கள் அந்த வீதியின் இரு கோடியிலும் அடைத்துக் கொண்டு நின்றது. இந்த போலீஸ் படையைக் கண்டதும் வெளியே மக்கள் கூடிவிட்டார்கள். இதனால் ஏற்பட்ட ஆரவாரம் உள்ளே இருந்த எங்களுக்குத் தெரிந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் போலீஸ் அதிகாரிகள், நிர்வாகக் கமிட்டி கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த பெரியார் இல்லத்தின் மேல் மாடிக்குவந்தனர்.

போலீஸ் அதிகாரிகள் எங்களைக் கைது செய்யப்போவதாக நாங்கள் தெரிந்துகொண்டோம். உடனே போலீஸ் அதிகாரி குழந்தைவேலு அவர்கள் உங்களையெல்லாம் கைது செய்திருக்கிறோம் என்று பெரியார் அவர்களிடமும் அண்ணா அவர்களிடமும் சொன்னார்கள். உடனே பெரியார் அவர்கள் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றார். அண்ணா அவர்கள் போலீஸ் அதிகாரிகளின் உத்தரவை வரவேற்பதைப்போல் புன்முறுவல் செய்தார். உடனே எங்கள் எல்லோரையும் பல வேன்களில் எழும்பூரிலுள்ள கமிஷனர் ஆபீசுக்கு அழைத்துச் சென்றார்கள். அவ்விடமிருந்து சென்னை மத்திய சிறைச்சாலைக்கு அழைத்துச்சென்றனர். சென்னையில் ஒரேபரபரப்பு. இந்த செய்தியைக் கேட்ட சென்னை மாநகர மக்கள் பெரும் கொதிப்படைந்தனர் என்று கூறினால் மிகையாகாது. அன்று மாலை நடைபெற இருந்த பொதுக்கூட்டத்தில் பெரியார், தமிழ்ப் பெரியார் திரு. வி. க., அறிஞர் அண்ணா மற்றும் பல தலைவர்கள் பேசுவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எங்களையெல்லாம் கைது செய்துவிட்டதால் கூட்டம் நடக்காது என்றுகூட சர்க்கார் எண்ணினார்கள். ஆனால் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள், .வெளியே இருந்த கழகத் தோழர்களுடன் அக்கூட்டத்தை நடத்தியது குறிப்பிடத் தக்கதாகும்.

எங்களைக் கைது செய்து சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்ற போது நேரம் பிற்பகல் 3 மணி இருக்கும். அதுசமயம் கரூர் தொழிலாளர் போராட்டத்தின் காரணமாக சிறை தண்டனை பெற்றிருந்த கரூர் கழகத் தோழர்களும், கம்யூனிஸ்டு ஆதரவாளர்களும் சென்னைச் சிறையில்தான் இருந்தனர். பெரியார் அவர்களையும் அண்ணா அவர்களையும் மற்றும் எங்களையெல்லாம் கண்டவுடன் அவர்கள் உற்சாகத்தோடு வரவேற்று அவர்களுக்கென்று தரப்பட்டிருந்த சீனி, பிஸ்கட் போன்றவற்றைக் கொடுத்து உபசரித்தனர். அவர்கள் உபசரிப்பு என்றென்றும் மறக்க முடியாததாகும்.

சிறைக்காவலில் வைக்கப்பட்ட எங்கள் நூறு பேரில் பெரியார், அண்ணா, கே. கே. என்., டி. பி. வேதாசலம், சி. டி. டி. அரசு, கே. கோவிந்தசாமி, ஜி.பி. சோமசுந்தரம், அழகிரிசாமி, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, நான் உள்ளிட்ட ஆகிய இருபது பேர்க்ளுக்கு மட்டுமே 'பி' வகுப்பு கொடுத்தார்கள். மற்றவர்களையெல்லாம் 'சி' வகும்பு கைதிகளாக காவலில் வைத்திருந்தனர். தினசரி எங்களைக் காணவருபவர்கள் பழம், பிஸ்கட் போன்ற தின்பண்டங்களைக் கொண்டுவந்து கொடுப்பது வழக்கம். அதிலும் சிறப்பாக பெரியார் அவர்களுக்கு நிறைய கொண்டுவந்து கொடுப்பார்கள்.

ஆனால் அவைகளையெல்லாம் பெரியாரும் சாப்பிடமாட்டார்— மற்றவர்களுக்கும் கொடுக்கமாட்டார். அவைகளையெல்லாம் தன்னுடைய அறையில் ஸ்டோர் ரூம் போல் அடுக்கிவைத்து அதற்கு என்னையும், கே. கோவிந்தசாமியையும் காவல் வைப்பார். அப்படியிருந்தும் பெரியார் அவர்கள் சற்று உலாவப் போகும்போது, அண்ணா அவர்களும், அழகிரிசாமி அவர்களும், அந்தப் பொருள்களையெல்லாம் எடுத்து "சி" வகுப்பிலிருந்த தோழர்களுக்கு கொடுத்தனுப்பிவிடுவார்கள். இப்படியாக நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. ஒரு வாரம் சென்றது. பிறகு எங்களையெல்லாம் விடுதலை செய்ய உத்தரவு வந்துவிட்டது. எல்லோரும் அவரவர்கள் தங்கள் தங்கள் பைகளை, துணிமணிகளை எடுத்துக்கொண்டு புறப்பட ஆயத்தமானோம். பெரியார் அவர்கள் சேமித்து வைத்திருந்த பழம், பிஸ்கட் வகைகள் ஏறத்தாழ இரண்டு பெரிய பெட்டிகள் நிரம்ப இருந்தன. அவைகளையெல்லாம் ஒழுங்குபடுத்தி என்னிடம் ஒன்றும், கே. கோவிந்தசாமி அவர்களிடம் ஒன்றும்கொடுத்து பத்திரமாக வீட்டுக்கு எடுத்துவரச் சொன்னார். இப்படி எடுத்துக் கொண்டு வருவது எங்களுக்கு வெட்கமாகவே இருந்தது. இருந்தாலும் பெரியார் சொல்கிறார்— என்ன செய்வது?

இதையெல்லாம் அண்ணா அவர்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார் போலும். பெரியார் அந்தப் பெட்டிகளை எடுத்துக்கொண்டு வருமாறு எங்களிடம் கூறிவிட்டு அவர் சிறை அறையிலிருந்து வெளியே சென்றார். நாங்கள் அந்தப் பெட்டிகளை எடுத்துக்கொண்டு பின்னால் சென்றுகொண்டிருந்தோம்.

உடனே எங்களுக்குப் பின்னால் வந்துகொண்டிருந்த அண்ணா அவர்கள் எங்களை நிறுத்தி, இந்தப் பெட்டிகள் என்ன என்று கேட்டார், விவரத்தைக் கூறினோம்.

"உங்களுக்குக் கொஞ்சம் கூட வெட்கம் இல்லையா? நாம் உள்ளே வந்தபோது, ஏற்கனவே கரூர் வழக்கு சம்மந்தமாக சிறையினுள் இருந்த கழக அனுதாபிகளும், கம்யூனிஸ்டு அனுதாபிகளும் எவ்வளவு பொருள்களைக் கொடுத்து வரவேற்றார்கள்? அதை வாங்கிக்கொள்ளத் தெரிந்ததே! இவைகளை அவர்களிடம் கொடுத்துவிட்டுவந்தால் குடியா முழுகிப் போய்விடும்? ஏதோ வரிசை கொண்டு போவதைப் போல் இவைகளை கொண்டுவருகிறீர்களே" என்று கேலியாகவும் கோபமாகவும் சொன்னார்!

"ஐயா கொண்டுவரச் சொன்னால் நாங்களென்ன செய்வது" என்றேன் நான்.

"சரி! ஐயாவுக்கு நான் சமாதானம் சொல்லிக்கொள்கிறேன். அவைகளை சிறையிலுள்ள கரூர் தோழர்களிடம் கொடுத்துவிட்டு வாருங்கள்" என்றார் அண்ணா!

நாங்கள் உடனே அவைகளைக் கரூர் தோழர்களிடம் கொடுத்தோம். ஆனால் அவர்கள் வேண்டாம் என்றுதான் சொன்னார்கள். அண்ணா அவர்கள் வற்புறுத்திக் கொடுத்துவிட்டார்கள்.

அவர்களுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி! எனக்கோ பெரியாருக்கு என்ன சொல்வதென்ற அச்சம்!

பிறகு எல்லோரும் பெரியார் வீட்டுக்கு வந்து சேர்ந்தோம். சிறைமீண்ட எல்லோருக்கும்

(அடுத்த பக்கம் பார்க்க)

புத்தி புகட்டுங்கள்!

[என். வி. என். சோமு பி. ஏ.]

தேர்தல்கள் என்பது நாட்டு மக்களின் எண்ணத்தை எடுத்துக்காட்டும் கண்ணாடி என்பார்கள்!

ஆளும் கட்சியின் கொள்கைகளை மக்கள் ஆதரிக்கிறார்களா அல்லது எதிர்க்கட்சிகள் சொல்வதை ஏற்றுக் கொள்கிறார்களா என்பதைக் கண்டறிந்துகொள்ள தேர்தல்தான் சிறந்த வழியாகும்.

ஆகவே மக்கள் தங்கள் எண்ணங்களை வாக்குச் சீட்டுக்கள் மூலம் இயல்பாகவே தெரிவிக்கும் நிலைமை நாட்டிலே இருந்தால்தான் தேர்தல்கள் மூலம் நல்லதொரு ஜனநாயக வளர்ச்சியை உண்டாக்க முடியும்.

பதவிகளைக் காட்டி அச்சுறுத்தியோ, பணம் கொடுத்து மயக்கியோ, மக்களது கருத்து நிலை தடுமாறச் செய்யப்படுமானால் நல்ல ஜனநாயகம் நாட்டிலே நிலவாது!

தேர்தல் காலத்தில் அமைச்சர்கள் தங்கள் அதிகாரங்களைப் பயன்படுத்தக் கூடாது என்று தி. மு. கழகம் பலமுறை எடுத்துக் கூறியுள்ளது!

பொதுத்தேர்தல் சமயத்தில் ஆறு மாத காலத்திற்கு முன்பாகவே அமைச்சர்கள் பதவியிலிருந்து விலகவேண்டும் என்றும் தலைவர்கள் பலர் கூறி வந்துள்ளனர்!

சென்ற பொதுத் தேர்தலில் காமராசர் அவர்கள், ஒவ்வொரு தொகுதியிலும் சென்று தன்னுடைய அதிகாரத்தையும், ஆள், அம்பு பலத்தையும் பிரயோகித்து மக்களிடம் ஓட்டு சேகரித்ததை தி. மு. கழகம் பல முறை கண்டித்துள்ளது.

இப்படி அமைச்சர்கள் தேர்தல் சமயங்களில் தங்களது அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு வரும்போது, அமைச்சர்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று சொல்லப்பட்ட கருத்தை, தமிழகத்தில் இருக்கும் சில "பெரிய பத்திரிகைகள்" கண்டிக்கக் கூட செய்தன!

ஆனால் இன்று நடைபெற்று முடிந்துள்ள இடைத் தேர்தல்களில் அமைச்சர்கள் செய்துள்ள அட்டகாசங்களைக் கண்ட பிறகாவது பெரிய பத்திரிகைகள் என்று சொல்லப்படுபவைகளின் சிந்தனை தெளிவடைய வேண்டும்!

ஆச்சாரியா கிருபளானி அவர்கள் போட்டியிட்ட அம்ரோகா தொகுதியில் நடைபெற்ற அநீதிகளை அவரே எடுத்துச் சொல்லியிருக்கிறார்!

வாக்குப் பதிவு நடைபெற்ற நாளன்று அரசு நிர்வாக யந்திரமே செயலற்றுப் போய் விட்டதாம்!

எந்த ஒரு சமயத்திலும் 20 அமைச்சர்களுக்குக் குறைவில்லாமல் தொகுதியில் தேர்தல் பணியில் ஈடுபட்டு வந்தனராம்!

தேர்தல் நாளில் மத்திய மாநில அமைச்சர்கள் பெருந் திரளாகத் தொகுதியில் திரண்டிருந்ததன் விளைவாக தங்கள் கண்ணுக்கு எதிரில், தேர்தல் விதிகளை மீறி காங்கிரசு கட்சியினர் கையாண்ட ஒழுங்கற்ற முறைகளைக்கூடத் தட்டிக் கேட்க இயலாத நிர்க்கதியான நிலையில் அரசு அதிகாரிகள் இருந்தனராம்!

மத்திய இரயில்வே அமைச்சர் ஷாநவாஸ்கான் அவர்கள், உ.பி. அமைச்சர் முசாபர் ஆசன் ஆகியோர் தேர்தல் பொறுப்பாளர்களாக இருந்தனராம்!

அமைச்சர்கள் தேர்தல் காலத்தில், அமைச்சர்கள் என்ற அதிகாரத்தோடு செல்வதால், நியாயமாகச் செயல்படவேண்டிய அதிகாரிகள் அமைச்சர்களுக்குப் பயந்து கொண்டு காங்கிரசின் ஊழல்களை அனுமதித்துவிடுகின்றனர் என்ற தி. மு. கழகத்தின் குற்றச்சாட்டுக்குத் தெளிவான சான்றாக ஆச்சாரியா கிருபளானியின் அறிக்கையை வைக்கிறோம்!

இதுமட்டுமல்ல! சுதந்திரா கட்சிப் பொதுச்செயலாளர் திரு. மசானி போட்டியிட்ட ராஜ்கோட் தொகுதியில், குசராத் மாநில உள்துறை அமைச்சர் ஒருவர் போலீஸ் அதிகாரிகளுடன் சென்று காங்கிரசுக்கு ஓட்டுப் போடும்படி மக்களை அச்சுறுத்தியிருக்கிறார்.

ஒரு பிரபல முஸ்லீம் வியாபாரியை காவல் நிலையத்துக்கு அழைத்துவந்து காங்கிரசுக்கு ஆதரவாக வேலை செய்யும்படி உ. பி. உள்துறை அமைச்சர் திரு. பரீக் வற்புறுத்தியதாகவும் திரு. மசானி குறிப்பிட்டுள்ளார்.

ஆச்சாரியா கிருபளானியும், மசானியும் கூறுகின்ற நிகழ்ச்சிகளின்படி பார்த்தால்—அமைச்சர்கள் தேர்தலில் "அமைச்சர்கள்" என்ற தகுதியோடு சென்றால், மக்கள் தங்கள் எண்ணப்படி வாக்களிக்கும் நிலையிலிருந்து தடுக்கப்படுகின்றனர் என்பது நன்கு தெளிவாகிறது!

இதையும் மீறி தேர்தல்களில் காங்கிரஸ் முறியடிக்கப்படுகிறது என்றால், வாக்காளர்கள் நல்ல அரசியல் அறிவு பெற்று விட்டார்கள் என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

அதேபோல் திருவண்ணாமலைத் தொகுதியிலும் முதலமைச்சர் காமராசர் இப்போதுதான் கிராமம் கிராமமாகப் போகிறார், மற்ற கிராமங்களுக்கும் போக இருக்கிறார்!

இந்த இடைத் தேர்தலில்தான் மக்களின் வரிப்பணத்தின் மூலம் அமைக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களை திருவண்ணாமலைத் தொகுதியில் முதலமைச்சர் அவசர அவசரமாக நிர்மாணிக்கிறார்!

சிகளூர் கிராமத்தில் ரூ. 4400 செலவில் அமைக்கப்பட்ட பாதை!

ஆதி அண்ணாமலை கிராமத்தில் ரூ 8000 செலவில் கட்டப்பட்ட குடிநீர்த் தேக்கம்!

ஆதியூர் கிராமத்தில் ரூ. 9900 செலவில் தேக்கம்!

பெருமணியம் கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள துவக்கப் பள்ளிக் கட்டிடம்!

இராஜபாளையம் கிராமத்தில் படிப்பகம்—கோணலூர் கிராமத்தில் மண் பாதை—பொலக்குணத்தில் ஒரு புதிய பாதை!—இப்படி திருவண்ணாமலை தொகுதியில் அபிவிருத்தித் திட்டங்களை இடைத் தேர்தலின்போது 'திறப்பு விழா' செய்யும் காரணம் என்ன?

காங்கிரஸ் சாதனை பாரீர் என்று பட்டியல் காட்டி மக்களை மயக்கவா! அதோடு மட்டுமல்ல! திருவண்ணாமலைத் தொகுதியில் காங்கிரஸ் வெற்றிபெற த. நா. கா. க. தலைவர் அனுப்பியுள்ள சுற்றறிக்கையைப் பார்த்தால், காங்கிரஸ் எவ்வளவு பெரிய பணமூட்டையைத் தூக்கிக்கொண்டு திருவண்ணாமலைக்கு வரப்போகிறது என்று இப்போதே சொல்லிவிடலாம்!

ஆகவே, கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே! பொதுமக்களே! அம்ரோகாவிலும், ராஜ்கோட்டிலும் காங்கிரசை மக்கள் வீழ்த்தியதைப்போல்—

திருவண்ணாமலையிலும் மந்தை மந்தையாக மந்திரிகள் வந்தாலும், கத்தை கத்தையாக நோட்டுக்களைத் தந்தாலும், காங்கிரசின் ஜனநாயக விரோதச் செயல்களை ஏற்கமாட்டோம்-தேர்தல் காலத்தில் அமைச்சர்கள் செய்யும் ஜனநாயக அநீதிகளை ஒப்புக்கொள்ள மாட்டோம் என்று கூறி, மக்கள் இயக்கமாம் தி. மு. கழகத்துக்கு மகத்தான வெற்றி தேடித்தந்து, காங்கிரஸ் ஏதேச்சாதிகாரத்துக்கு நல்லபுத்தி புகட்டுங்கள்!

●

11-ம் பக்கத் தொடர்ச்சி

அன்று பகல், பெரியார் அவர்களே விருந்துவைத்தார்கள்.

விருந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே கே. கே. என்., டி. பி. வேதாசலம் போன்ற தலைவர்களிடம் பெரியார் அவர்கள், சிறையில் எனக்குக் கொடுத்த கேக், நல்ல பழங்களையெல்லாம் கொண்டு வந்திருக்கிறேன். உணவு முடிந்தவுடன் அவற்றையெல்லாம் சாப்பிடலாம் என்று அவைகளைப்பற்றி வர்ணித்துக் கொண்டிருந்தார்.

இதைக் கேட்டதும் எனக்கு இடிவிழுந்ததைப் போலாயிற்று. சாப்பிடவே முடியவில்லை. பிறகு விருந்து முடிவுற்றது. நான் மாடியிலிருந்து கீழே வந்துவிட்டேன்.

இச்சமயத்தில் அவர் எடுத்து வரச்சொன்ன சாமான்களையெல்லாம் கொண்டுவரும்படி என்னைப் பெரியார் அழைப்பதாக நண்பர்கள்வந்து கூறினார்கள்.

அண்ணா அவர்கள் சிரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

"என்னண்ணா சொல்வது இப்போது, நான் சமாதானம் சொல்கிறேன் என்றீர்களே, வந்து சொல்லுங்களேன்" என்றேன்.

"நீயே போய் சொல்" என்று சிரித்துக்கொண்டே கூறிவிட்டு, வேறொரு அறையில் நண்பருடன் போய் உட்கார்ந்துகொண்டார்.

இதற்குள் இரண்டு மூன்று முறை பெரியார் என்னைத் தொடர்ந்து அழைக்கும் சத்தம் கேட்டது!

பிறகு மாடிக்குச் சென்றேன். எங்கே, பழங்களும், கேக், பிஸ்கட்களும் என்று கேட்டார்.

எனக்கு என்ன சொல்வதென்று தெரியாமல், அண்ணா அவர்கள் கரூர் தோழர்களுக்கு கொடுத்து விடும்படி சொன்னதை பெரியார் அவர்களிடம் சொன்னேன்.

இதைக் கேட்ட கே. கே. என், டி. பி. வேதாசலம் போன்றவர்களுக்கெல்லாம் சிரிப்பு வந்து விட்டது.

"சரி சிறையிலிருப்பவர்களுக்குத்தானே கொடுத்தார்கள். பரவாயில்லை என்றார்கள் அவர்கள்.

ஆனால் பெரியாருக்கோ கடுமையான கோபம் வந்துவிட்டது.

அண்ணாதுரை ஒரு பெரிய பிரபு அதைவிட நீங்கள் எல்லாம் மகா பிரபுக்கள். யார் வீட்டுப் பொருளை எடுத்து யாருக்குக் கொடுப்பது? உங்களுக்கு கொண்டுவர வெட்கமாயிருந்தால் என்னிடம் சொல்லியிருந்தால் நான் தலைமீது சுமந்து கொண்டு வந்திருப்பேன்—என்றெல்லாம் பெரும் நட்டத்துக்கு உள்ளானவர் போல் பேசினார்.

அருகிலிருந்த அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி அவர்கள் இதெல்லாம் உங்களுக்கு இலவசமாக வாங்கிக் கொடுத்த சாமான் தானே என்று அவர் சொன்னார்.

பெரியாருக்கு இன்னும் ஆத்திரம் வந்துவிட்டது. எல்லா கோபத்தையும் என் மீதும் கோவிந்தசாமி மீதும் காட்டினார். நான் பிறகு கீழே வந்துவிட்டேன்.

இப்படி என்னைச் சிக்க வைத்த அண்ணா அவர்கள் மற்ற நண்பர்களோடு இந்தச் சம்பவத்தைக் கூறி சிரித்துக் கொண்டிருந்ததைப் பார்க்கும்போது எனக்குக் கோபமாய் வந்தது.

உடனே என்னைப் பார்த்து, நான்தான் கொடுக்கச் சொன்னால் நீ எப்படிக் கொடுத்தாய்? என்றார். இப்படி என் போன்ற தோழர்களை வம்பில் சிக்க வைத்து மகிழ்ச்சியடைவதில் அண்ணா அவர்களுக்கு அலாதி ஆசை!

(தொடரும்)

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி—சோமு அச்சகம், 16, இப்ராகீம் சேட் தெரு, சென்னை-1

அண்ணாவுடன் நான்

குடந்தையில் அறப்போர்!

அறிஞர் அண்ணாவின் கடமை உணர்ச்சி!

அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி!

1948-ம் ஆண்டு ஓமந்தூரார் ஆட்சியில், திராவிட கழகத்திற்கு விதிக்கப்பட்ட பேச்சுரிமை எழுத்துரிமை தடையையும் இந்தித் திணிப்பையும் எதிர்த்து அறப்போர் நடத்துவதென்று குடந்தையில் திரு. கே. கே. என். அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற திராவிட கழக நிர்வாகக் குழுவின் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. அதற்கேற்ப போராட்ட முறை வகுக்கப்பட்டு குடந்தை நகரில் தடை உத்திரவை தொடர்ந்து மீறுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

அதுசமயம் பெரியார் அவர்களுக்கும், அண்ணா அவர்களுக்கும் சிறு அபிப்ராய பேதம் இருந்து வந்ததால், இந்தப் போராட்டத்தில் அண்ணா அவர்கள் தீவிரமாகக் கலந்துகொள்ள மாட்டார் என்றெல்லாம் கழகத்தில் ஒரு சாரார் ஆருடம் கூறி வந்தனர்.

இந்நிலையில் போரரட்டத்திற்கு முன் நாள் இரவு 12 மணி அளவில், பெரியார் அவர்களையும் தோழர்கள் கே. கே. நீலமேகம், எஸ். கே. சாமி, உள்ளிட்ட உள்ளூர் பிரமுகர்களையும் சர்க்கார் கைது செய்து குடந்தை சிறையில் காவலில் வைத்தனர். நான்கு நாட்களாகக் குடந்தையில் இருந்த நான் போராட்டத் தினத்துக்கு ஒருநாள் முன்னதாகவே சென்னை சென்று அன்றிரவே போட்மெயிலில் குடந்தை திரும்பினேன்.

அதிகாலை 3 மணி. குடந்தை ரெயில்வே நிலையத்தில் ஏராளமான கூட்டம், அடக்கு முறை ஒழிக. பெரியார் வாழ்க! அண்ணா வாழ்க! கே. கே. என் வாழ்க! என்றெல்லாம் முழக்கமிட்டனர். எனக்கு ஒன்றும் புரியவில்லை, ரெயிலை விட்டு இறங்கியதும் உள்ளூர் கழகத் தோழர்களும் தோழர் தவமணிராசன், மணி அம்மை ஆகியோரும் அய்யாவைக் கைது செய்துவிட்டார்கள் என்று கூறிப் பதறினர். பின்னர் அனைவரும் தோழர் வி. சின்னத்தம்பி அவர்கள் தோட்டத்தில் கூடி யோசித்தோம்.

காலை 8 மணிக்குத் தடை உத்திரவை மீறவேண்டும். என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை. போராட்டத்தை ஒத்தி வைக்கலாம் என்றுசிலர் யோசனை கூறினர். போராட்டத்தை நடத்த வேண்டும் என்று நானும் மற்றும் பல தோழர்களும் கூறினோம்.

பெரியாரும், மற்ற தோழர்களும் கைதான செய்தி காட்டுத் தீ போல நாடெங்கும் பரவியது. குடந்தை வரலாற்றில் அதுவரை கண்டிராத ஏன்—இன்றுங்கூட கண்டிராத மக்கள் கூட்டம் ஆவேசத்துடன் திரண்டது. அதேபோல போலீஸ் படையினர் கவசமணிந்த காவல் படையினர் போர்க் களத்தில் குதிப்பதைப் போல அணி அணியாகக் குவிந்தனர். குடந்தை நகரமே போர்க் கோலம் பூண்டது.

உள்ள உறுதி படைத்த 10 தோழர்களைத் தேர்ந்தெடுத்து தடை உத்திரவை மீறி ஊர்வலமாக அழைத்துச் சென்றோம்.

எங்களைத் தொடர்ந்து மக்கள் வெள்ளமே திரண்டது என்று சொன்னால் அது மிகையாகாது. அதுவும் பெரியாரும் மற்ற தலைவர்களும் உள்ளூர் சிறையில் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதால், கழகத்தோழர்கள்மட்டுமின்றி பொதுமக்களும் ஆவேசம் கொண்டவர்களாக ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். நாங்கள் புறப்பட்ட இடம் போலீஸ் அதிகாரிகளுக்குத் தெரியாது. நான்கைந்து வீதிகளில் ஊர்வலமாக வந்து குடந்தை போலீஸ் நிலையம் உள்ள பெரிய வீதியில் நுழைந்தோம். நூற்றுக் கணக்கான போலீஸ்காரர்களும் அதிகாரிகளும் ஆயுதங்களுடன் எங்களை எதிர்நோக்கி வந்து வேலி போட்டதைப் போல வழி மறித்து நின்றனர்.

தொண்டர்களை மேல் நோக்கிச் செல்லுமாறு கூறினேன். அதேபோல அடியெடுத்து வைத்ததும் அதிகாரிகள் அடக்கு முறையை ஏவினர். தொண்டர்களின் மண்டை உடைந்தது. அவர்கள் சிந்திய இரத்தம் திராவிட நாடு சித்திரம் போல் அமைந்தது. என்றாலும் உறுதியிலிருந்து தளரவில்லை. இறுதியாகப் போலீசார் தொண்டர்களைக் கைது செய்தனர்.

அருமைத் தோழர்களே, இச் சந்தர்ப்பத்தில் ஒன்றைக் கூறக் கடமைப்பட்டவனாவேன், அண்ணா அவர்கள் இப்போராட்டத்திற்கு வரமாட்டார். நாங்கள் தான் பெரியாரின் கொள்கை வழி நடப்பவர்கள் என்றெல்லாம் சாதாரண காலத்தில் சிந்து பாடித் திரிந்த 'வீரர்கள்' ஒருவர்கூட அன்று குடந்தைக்கு வரவில்லை. இன்னும் சொல்லப் போனால் குடந்தை நகரில் தொண்டர்கள் இரத்தம் சிந்திக் கடமையாற்றும் போது அன்று கழகத்தின் தலைவர்களில் ஒருவராய் விளங்கிய ஒருவர் தஞ்சை மார்க்கத்தில் இருந்து மாயவரம் போய்க் கொண்டிருந்தார். அவரிடம் இச் செய்தி சொல்லப்பட்டது. அவர் என்ன சொன்னார் தெரியுமா? நடராசன் இங்கே ஏன் இருக்கிறார், சென்னைக்குப் போகச் சொல்லுங்கள். இல்லாவிட்டால் அவரையும் கைது செய்து விடுவார்கள் என்று கூறிவிட்டு ரெயிலில் தொடர்ந்து பிரயாணமானார்.

முதல் நாள் போராட்டம் வெற்றிகரமாக முடிந்தது. நானும் மற்ற நண்பர்களும் அடுத்த நாள் போராட்டம் எப்படி நடத்துவதென்று யோசித்துக் கொண்டிருக்கும் போது அறிஞர் அண்ணா அவர்கள், அன்றைய சென்னை மாவட்ட திராவிட கழகத் தலைவர் சி. டி. டி. அரசு, சேலம் சித்தையன் ஆகியோருடன் குடந்தை வந்து சேர்ந்தார்கள். அறிஞர் அண்ணா அவர்களைக் கண்டதும் எங்களுக்கு ஏற்பட்ட உற்சாகம், தைரியம் சொல்லி முடியாது.

குடந்தைச் செய்தியை அறிஞர் அண்ணா அவர்கள், அறிந்ததும் உடனே திருச்சிக்குப் புறப்பட்டுச் சென்று தி. க. நிர்வாகத் தலைவர் தி. பொ. வேதாச்சலம் அவர்களுடன் கலந்து பேசிவிட்டு குடந்தை வந்து சேர்ந்து போராட்டத்தைத் தலைமை வகித்து நடத்தினார்கள். நான் அண்ணாவுடனிருந்து துணை புரியும் பேற்றினைப் பெற்றிருந்தேன். அறிஞர் அண்ணா அவர்களை யார் யார் மிதவாதி என்று கேலி பேசினார்களோ அந்த சூரர்கள் ஒருவர்கூட குடந்தை பக்கம் தலைகாட்டவில்லை. இரண்டொரு நாட்களில் பெரியாரை விடுதலை செய்து விட்டனர். அவர் சென்னைக்குச் சென்றுவிட்டார். குடந்தையில் அண்ணா அவர்களும் நானும் தங்கியிருந்து போராட்டத்தை தினசரி தொடர்ந்து நடத்தி வந்தோம். சில நாட்கள் சென்று மணியம்மையும் கைது செய்யப்பட்டார். சர்க்காரின் போக்கு சிறிதும் மாறவில்லை.

எனவே போராட்ட முறையை சற்று மாற்றி அதாவது தீவிரமாக்குவதற்குப் பெரியார் அவர்களிடம் கலந்து பேசிவிட்டு வருகிறேன் என்று அண்ணா அவர்கள் சென்னை சென்றார்கள்.

அடுத்த நாள் காலை தடை உத்திரவை நமது தொண்டர்கள் மீறிய போது அவர்களைக் கைது செய்தது மட்டுமின்றி என்னையும் கைது செய்து பாபநாசம் சப் ஜெயிலில் காவலில் வைத்தார்கள்.

சென்னை சென்ற அண்ணா அவர்கள் போராட்டத்தைத் தீவிரமாக நடத்துவதற்குப் பெரியாரிடம் வேண்டியும் வாதிட்டுமிருக்கிறார். ஆனால் பெரியார் அவர்களோ இதுவரை நடைபெற்றதே போதும், இனி போராட்டம் வேண்டாமென்று கூறிவிட்டார்கள். அத்துடன் அப்போராட்டம் முடிந்தது. ஒரு மாத காலம் பாபநாசம் சிறையில் காவலில் வைக்கப்பட்டு பிறகு, 2 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

என்னை உடனே திருச்சி மத்திய சிறைக்கு மாற்றி விட்டனர்.

திருச்சி சிறையில் நான் இருந்த போது திருச்சி கழகத் தோழர்களும் திருச்சியில் நாடகம் நடத்தி வந்த நடிகவேள் எம். ஆர். ராதா அவர்களும் அவ்வப்போது வந்து என்னைச் சந்தித்து உற்சாக மூட்டி வந்தனர். அதே சமயத் தில் குறிஞ்சிப்பாடியில் தடை உத்திரவை மீறிய தோழர் இரா. சாம்பசிவம் உள்ளிட்ட குறிஞ்சிப் பாடி கழகத் தோழர்கள் 10 பேருக்கு 9 மாத சிறைத்தண்டனை அளிக்கப்பட்டு அவர்களும் திருச்சி சிறைக்கு அனுப்பப்பட்ட னர். எனக்கும், சாம்பசிவம் அவர்களுக்கும் பி. வகுப்பு தரப் பட்டது. மற்ற தோழர் களுக்கு சி. வகுப்பு தரப்பட்டது. என்ருலும் பி. வகுப்பு உள்ள பகுதியிலேயே அவர்களை சி. வகுப்பில் இருக்கச் செய்தனர். நாங்கள் அனைவரும் திருச்சி சிறையில் உற்சாகத்துடனிருந் தோம்.

எனது இரண்டு மாத சிறைத் தண்டனை முடிந்து விடுதலை யாகும் நாளன்று மாலை திருச்சி தேவர் மன்றத்தில் வரவேற்புக் கூட்டம். அக்கூட்டத்தில் அறிஞர் அண்ணு அவர்களும் கலந்து கொள்கிருர் என்ற செய்தியையும் எனக்கு அறிவிக்கப்பட்டது. நான் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன். நான் விடுதலையாகும் நாளன்று திருச்சி கழகத் தோழர்கள் என்னை வரவேற்க சிறைவாயி லுக்கு வந்திருப்பதாகக் கூறினர். அதுபோல அவர்களும் வந்திருந் தார்கள். ஆனுல் அவர்களுடன் வந்திருந்த மற்ருெருவரைக் கண் டதும் என் வாழ்நாளில் பெருத பெரும் மகிழ்ச்சியை அன்று அடைந்தேன். அவர் யார்? அவர்தான் நமது மதிப்பிற்குரிய தலைவர் குடும்பத் தலைவர் அறி ஞர் அண்ணு அவர்கள்!

அறிஞர் அண்ணு அவர்களும் திருச்சி கழகத் தோழர்களும் ஏறத்தாழ 2 மணி நேரம் வரை சிறைவாயிலில் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. நான் மிகவும் வருந்தி னேன். பகல் 1 மணிக்குத்தான் சிறை மீண்டேன். நமது அண்ணு அவர்களும் தோழர்கள் பராங் குசம், அம்பில், சாம்பு, வானமாமலை டி. கே. எஸ். உள்ளிட்ட பல தோழர்கள் மாலை அணிவித்து வரவேற்றதை என் வாழ்நாள் உள்ளளவும் மறக்க மாட்டேன். அதை பெரும் பேருக நான் எண்ணியெண்ணி மகிழ் வதுண்டு.

அன்று மாலை தேவர் மன்றத் தில் நிர்வாகத் தலைவர் தோழர். டி. பி. வேதாச்சலம் அவர்கள் தலைமையில் எனக்குப் பாராட்டுக் கூட்டம். சிறப்புற ஏற்பாடு செய் யப்பட்டிருந்தது.

அதுசமயம் அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி அவர்கள் மிகவும் நோய்வாய்ப்பட்டு, பண வசதி யின்றி தொல்லை பட்டிருந்தார். இந்த நெருக்கடியான நேரத்தி லும் பெரியார் அவர்கள் உதவி செய்ய முன்வந்தாரில்லை. எனவே இக்கூட்டத்தில் அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி அவர்களுக்கு உதவி செய்யும் எண்ணத்துடன் துண்டு களை ஏந்தி கழகத் தோழர்கள் நிதி திரட்டிக் கொண்டிருந்தனர்.

சிறை மீண்ட என்னைப் பாராட் டிப் பலர் பேசினர். இறுதியாக அண்ணு அவர்கள் என்னைப் பாராட்டிப் பேசும்போது தெரி வித்த கருத்துக்கள் நான் மட்டு மல்ல, அக்கூட்டத்தில் கலந்து கொண்ட தோழர்கள் ஒவ்வொரு வரும் வாழ்நாள் வரை மறக்க முடியாததாகும்.

அண்ணு சொன்ஞர்கள்— "இன்று இக்கூட்டத்தில் நண்பர் நடராசனை சிறை மீண்ட வீரரே, தீரரே என்று நாம் பாராட்டு கிருேம். மலர் மாலைகள் அணி விக்கிருேம். அனைவரும் கையொலி எழுப்பி உற்சாகத்தை அளித்திருக்கிருேம்.

இதேபோலத்தான் நமது அழ கிரிசாமி அவர்களைப் பல மேடை களில் நீங்கள் பாராட்டி யிருக் கிறீர்கள். மாலைகளை அணிவித் துப் போற்றியிருக்கிறீர்கள். ஆனுல் இன்று அவர் நிலைமை என்ன? பயங்கரமான நோயால் பீடிக்கப் பட்டு அவர் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் நேரத்தில்கூட நமது கழகத் தலைமை அந்த உண் மைத் தோழருக்கு துணைபுரிய முன்வரவில்லை. இங்கே அழகிரி சாமியின் உதவிக்காக துண் டேந்தி வசூலிக்கிறீர்கள்.

எத்தனை மேடைகளில், மாநாடு களில் அஞ்சாநெஞ்சன் அழகிரி வாழ்க என்று நாம் கூறியிருக் கிருேம். அவரது பேச்சும் மூச்சும் இந்த இயக்கத்தை எவ்வளவு வளர்த்திருக்கும்? ஆனுல் அவரது உயிர் ஊசலாடிக் கொண்டிருக் கும் பொழுது அதற்குத் துணை புரியும் மனவளம் நம் தலைமைக்கு இல்லை. அவர் கண்ட பலன் மலர் மாலைகளும் பாராட்டுரைக ளும்தான் நண்பர் நடராசனைப் பாராட்டும் இச் சமயத்தில் இதை கூறுவதற்குக் காரணம் கழகத் திற்காக அயராது பணியாற்றும் நடராசனைப் போன்ற தோழர்களை இவ்வாறு பாராட்டுவதால் மட் டும் பயனில்லை அவர்களது வாழ்க்கை நலனிலும் நாம் அக் கறை காட்ட வேண்டும்.

எனவே, இப்பாராட்டுக் கூட் டத்தின் வாயிலாக நான் ஒன்று கூற விரும்புகிறேன். **"இனி என் னைப் பொதுக்கூட்டத்திற்கு அழைப் பவர்கள் எனக்காக வழிச் செலவுக்கு ஒன்றும் அனுப்பாமல், அழகிரிசாமி அவர்களுக்கு நூறு ரூபாய் அனுப்பி அவர் பெற்றுக் கொண்ட ரசீதை மட் டும் எனக்கனுப்பினுல் நான் கூட் டங்களில் கலந்து கொள்கிறேன். இந்த வகையிலாவது அவருக்கு நம் மாலான உதவியைச் செய்வோம்."** என்று உணர்ச்சியுடன் கூறினுர் அண்ணு. நானும் மற்ற தோழர்க ளும் கண் கலங்கி விட்டோம்.

என்ருலும் என்னைப் பாராட்டும் இக் கூட்டத்தின் வாயிலாக அஞ் சாநெஞ்சன் அழகிரிசாமி அவர்க ளுக்குத் துணைபுரியும் சீரிய முயற் சிக்கு வழி கோலியதை எண்ணி நான் மன நிறைவு பெற்றேன்.

அறிஞர் அண்ணு அவர்களின் திருச்சிப் பாராட்டுக் கூட்டப் பேச்சு பெரியாருக்கு ஆத்தி ரத்தை உண்டாக்கியது. வெளிப் படையாகச் சொல்ல வேண்டுமா ஞல் அஞ்சாநெஞ்சன் அழகிரி சாமி அவர்களுக்கு உதவி புரிய முன்வராத பெரியார், அவர்களின் மீது நான் வைத்திருந்த பாசம் சற்று குறைந்தது என்று கூறினு லும் மிகையாகாது.

அண்ணு அவர்களின் இவ்வா ருன உதவியால்; அழகிரிசாமி அவர்கள் ஆறு மாத காலம் மேலும் உயிர் வாழ்ந்தேன் என்று அவர் இறக்குந்தருவாயில் கூறி யதை திராவிட கழகத் தோழர் களில் பலருக்குத் தெரிந்திருக்க முடியாது.

[தொடரும்]

பம்பாய் தமிழ்ச் சங்கம்

23—6—63 ஞாயிறு மாலை 6 மணி சயன் ரோடிலுள்ள சங் கக் கட்டிடத்தில் 'மொழிப்பற்று' என்பதுபற்றி திரு. த. மு. பொற்கோ சொற்பொழிவாற்றுவார். அனை வரும் வருகை தருமாறு செய லாளர்கள் டி. வெங்கட கிருஷ் ணன், ஆர்.எஸ்.எம். நரசிம்மன் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

6-ம் பக்கத் தொடர்ச்சி

கெட்டவன் கணவன் என்ற போதிலும், மனைவியாகிய நான் அவர் மீது இரக்கம் கொண்டு, குற்றத்தை மன்னித்து, அவரை ஏற்றுக்கொண்டேன். அன்றே இவ்வூரை விட்டு ஓடிவிட்டோம்.

இதுதான் நடந்ததும்; நடந்து விட்டதும்!...—என்ற விமலா, சுழல்நீரில் சிக்கியவள் போல் வாய் விட்டு அண்ணு என புலம் பினுள்.

மதியின் சோகக் கதையைக் கேட்டுக் கொண்டு, சிலைப் போலான வேலனும், விந்தனும் இன் னதென்று விளங்காமல், கண்ணீர் விட்டு நின்றனர்!

உள்ளே இருந்த பெண்களின் குரல்கள் ஒன்று சேர்ந்தாற்போல் ஓலத்தோடு எழும்பியது! "என் னே! என்னே!!" என்று, அலறி புடைத்துக் கொண்டு உள்ளே ஓடினர்!

கண்ணிரண்டும் மூடப்பட்டு, கள்ளக் கபடமற்ற மதி, மரணத் தின் மடியில் கிடந்தாள்! அவள் வயிற்றினில் வளர்ந்து வந்த மழலை பிறந்ததும், மதியைக் கொன்றது மல்லாமல், "தாயற்ற சேயாய் நான் வாழேன்" என்ற தோர் நிலையோடு, அந்த ஆண் குழந்தையும் இரு சின்னஞ் சிறு கண்களை மூடிக்கொண்டு, தாயின் பக்கத்தில் பிணமாகக் கிடந்தது— அணைந்த விளக்காய் அவ்வீடு மாறியது (முற்றிற்று)

எழில்மிக்க நடை!

எழுச்சியூட்டும் கருத்தோவியம்!

தோழர்

வி. ஆர். மதனகோபால்

பி.காம். அவர்களின்

புதுமைப் படைப்பு!

அண்டனி

கிளியோபாட்ரா

'திராவிடன்' 15-7-63

இதழிலிருந்து தொடங்குகிறது!

கிழமை தோறும்

சிறந்த விருந்து!

அதிகப் பிரதிகள் தேவைப்படும் விற்பனையாளர்கள் உடனே எழுதுக!

விவரங்கட்கு:—

நிர்வாகி: 'திராவிடன்'

சென்னை-1.